# போர்வாள்

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B. A. (Hons.)

தனி இதழ் அணு 1½
வெளிநாடு அணு 2

வாள் 1 | சென்னை 11—10—47 சனிக்கிழமை | வீச்சு 9

## ஆட்டங் கொடுக்கிறது!

[தொடர்பன்]

அழகான கட்டிடம், உறுதி கடைக்கால், அடிக்கடி துபார்க்க ஆட்கள் இத்தனை ந்தும் ஒரு சிறு ஆலஞ் க்கு வேரூன்ற இடங் டுத்தால்போதும். வேரூன்ற ன்ற செடி பெருத்து சுவர் விட்டு கடைக்கால் சரிந்து எவ்வளவு உறுதியான டமாகவோ, கோவிலாக இருந்தாலும் நிமிர்ந்து முடியாது சரிந்து அழிந்து தை ஆங்காங்கு நாம் பார்த் கிறோம்.

நாட்டில் இரண்டாயிர டுகளுக்கு முன் கட்டப் கட்டிடம் ஒன்று இருக் . மக்கள் சமுதாயத்தின் ானமை என்னும நிலத்தில் லம் என்னும் அடித தின்மீது எழுப்பப்பட்டு, ள் மதம் பயம் என்னும் வர்களைக்கொண்டு நிலைத்து ம் வருணாசிரமக் கட்டிடம் அது. அதனுள் பார்ப் ள் என்னும் மேனிவாடா மேற்குடியினர் இதுவரை விடாது வாழ்ந்து வருகின்றனர்.

அந்த நெடுங்காலக் கட்டிடத் தின்மீது முற்காலத்தில் சமணம் என்னும் புயல் காற்று வீசிற்று; புத்தம் என்னும் பெருமழை பெய்தது. அதனல் அக் கட்டிடம் இடிந்து தூளாகி விடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது, ஆனாலும் அத்தகைய எதிர்ப்புக்கள் மேலும் வராத வகையில் தக்க பாதுகாப்பு இட்டு அன்றைய நிலையை எப்படியோ சமாளித்துக்கொண்டு விட்டனர் பார்ப்பனர்கள். இடைக்காலத்தில் அவ்வீடு பல இன்னல்களுக்கு இரையாயிற்று. என்றாலும் புராணப் படலத்தை வீசி, மக்களின் அறிவை மங்கச் செய்து தம் வாழ்வை வளமாக்கிக் கொண்டனர் பூசுரர்கள்.

இப்படியெல்லாம் விழிப்போடு தக்க பாதுகாப்பு மேற்கொண்டு வரும் மேற்குடியினரால் கூட அவ்வர்ணாசிரம வீட்டை இக்காலத்தில் மேலும் மேலும் ஓட்டு வேலை செய்து சரிந்து விழாது இருக்கச் செய்ய முடியவில்லை. வர்ணாசிரம தர்மத்தால் இந்துக்கள் என்று சொல்லப்படுபவர்களுக்குள் பற்பல பிரிவுகளை உண்டாக்கி, அவர்களை ஒன்று சேர்ந்து வாழ வொட்டாத, தீண்டாதவர்களாக அண்டக் கூடாதவர்களாக, கலந்து வாழ முடியாதவர்களாகச் செய்தும் கூட, பார்ப்பனர்களின் நிலை வரவர மிகக் கேவலமாகத் தாழ்ந்து விட்டது. பொது மக்கள், அவர்கள் இட்ட திரையைக் கிழித்துக்கொண்டு, வெளியுலகைநோக்க ஆரம்பித்து விட்டனர். பார்ப்பனர்கள் என்னதான் வகுப்புவாத மேற்பூச்சு பூசி, நாத்திக கிலி என்னும் வேலியிட்டு, தம் பொல்லா வீட்டை-வர்ணாசிரம முறையை —நிலைக்கச் செய்தாலும் இது நாள்வரை உறைந்து கிடந்த இன உணர்ச்சி, மிகுந்த ஓட்டத்துடன் தமிழர் ஒவ்வொருவரின் நாடி நரம்புகளிலும் பாய்ந்து ஓடுகிறது.

அவ்வுணர்ச்சி காங்கிரஸ் வாதி, நடுநிலைவாதி, அரசாங்க ஊழியர், மாணவர் என்ற வேறுபாடின்றி அனைவர் உள்ளத்திலும் பெருக்கெடுத்திருக்கிறது. தன்னை இது வரை இறுக்கிப் பிணித்திருந்த எல்லாவகை கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிந்து அது, வீதி தோறும், வீடுதோறும், நாடு நகர்தோறும், நன்றாக முளைத்துச் செழித்துப்பெருத்து வருகிறது. வர்ணாசிரமப் பழங்காலச் சுவர்களெல்லாம் தன்மானம் எனும் ஒளியாலும், உணர்வாலும் தாக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் நல்லதோர் உணர்ச்சிவேர் ஆழப்பதிந்துள்ளது.

"கல்வித்துறையில் மட்டுமின்றி அந்தஸ்து, வேலை உயர்வு, சம்பள அதிகரிப்பு எல்லா விஷயத்திலுமே

**பிராமணர்களை பதவியிலிருந்து ஒழித்து விடுவதென்ற கொள்கை நடை முறையில் வந்து விட்டதாகவே தெரிகிறது''** என்ற அங்கலாய்ப்பு ஒவ்வொரு பார்ப்பனர் வாய்மொழி மூலமும் செய்கை மூலமும் நன்றாக வெளிப்படுகிறது. "இந்து மதம் நாத்திகப் புயலால் அழிந்துவிடாது" என்று 'கல்கி' மேலுக்கு இடம் விடாது கூறினாலும் அவரது உள்ளத்தில் அச்சந் தட்டியிருப்பது பளிங்கு போல நமக்குத் தெரிகிறது. பார்ப்பனீயத்தை 'விட்ட குறை தொட்ட குறையாக'க் கண்டிக்கும், 'நல்ல' பார்ப்பனரான வ. ரா. ஆரியமாவது திராவிடமாவது என்று சல சலப்பதும், விஞ்ஞானத் துறையில் நாட்டஞ் செலுத்த வேண்டிய சி. வி. இராமன் பார்ப்பனர்களுக்காகப் பரிந்து பேசத் தம் சிறந்த நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்குவதும் எதைக் காட்டுகின்றன? பழமைக்கு ஆபத்து பிறந்து விட்டது என்பதைத்தான்.

"இந்து மதம் பார்ப்பனர்கள் வாழ்வுக்கு மட்டும் வழிகோலுகிறது. ஒவ்வொரு பார்ப்பனரின் உள்ளத்திலும் உறைவது மதம் அல்ல; கடவுளும் அல்ல; தியாக உணர்ச்சியுமல்ல. பின் என்ன? தன்னலம். சூழ்ச்சி. இதை மறைக்க அவர்கள் தங்களுக்குத் தெரிந்த எல்லாவகை மாய மாலங்களையும் செய்து பார்க்கின்றனர்." என்ற எண்ணம் இன்று மக்கள் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது. இது கண்டு ஆரிய வட்டாரத்தினர் அலறுகின்றனர்.

"இனி, கும்பகோணத்தில் பக்தர்கள் குவிகிறார்கள் என்று எத்தனை படம் பிடித்துப் போட்டாலும், காணாத காட்சிகள் என்று எதை எதையோ இட்டுக் கட்டிக்காட்டினாலும், தென்னாட்டு மணி தம்பிகள் ஓட்டை மணியை இரவல் வாங்கி அசைத்தாலும் அவையெல்லாம் பித்தலாட்டமே ஒழிய, உள்ளத்தில் உண்மையோடு செய்யப்படும் பணிகள் அல்ல என்பதைத் தமிழ் உலகம் தெள்ளத் தெளிய உணர்ந்து விட்டது.

இன்று ஆரியத்தின் கடைசிக் குரல்—பெரு மூச்சு கேட்கிறது. இன்னும் ஒரே ஒரு அடி அவ்வளவுதான்! ஆரிய... அதன் கொட்டமும் மண்... மண்ணாக மடிந்துவிடும்.

வர்ணாசிரமம் எனும் கட்டிட முறை ஆட்டங்... துவிட்டது. அது இடிந்... யும்நாள் இன்றா நாளையா... பதுதான் இனி முடிவு... வேண்டியது.

---

# இந்த நிலை ஏன் வந்தது?

கல்வியைக் கடவுளாகவே கொண்டு, புத்தகங்களை... சரசுவதியாகவே வைத்து வணங்குகிறோம் நாம். ஆனா... நம் நாட்டில் படித்தவர்களோ நூற்றுக்குப் பத்துபேர்தான்... உள்ளனர். இது ஏன்?

பொருள், லட்சுமி என்று பூஜிக்கப் படுகிறது இங்கு... ஆனால், நம் தங்கம் முழுவதும் செல்வது அமெரிக்காவுக்கு... இது ஏன்?

எது செய்யத் தவறினாலும் ஆயுத பூசை செய்ய நாம்... தவறுவதில்லை. நமக்குச் சோறு போடுவது இந்த ஆயுதங்... கள் தானே என்று நாம் நம்புகிறோம். நம்புவதால் அவ... றிற்குச் "சோறு படைக்கிறோம்"; ஆனால், கைத்தொழி... வளர்ச்சி சிறிதும் இல்லையே இந்த நாட்டில். இது ஏன்?

"உண்ணும் சோறு, தின்னும் வெற்றிலை, பருகும் நீ... எல்லாம் கண்ணன்" என்கிறோம் நாம்; அன்னத்தை... ஆண்டவனாகவே கருதுகிறோம். ஆனால், அரைப் பட்டினி... களும், முழுப் பட்டினிகளும் இங்குதானே அதிகம் உள்... ளன. இது ஏன்?

பசுமாடுகளைத் தேவர்கள் அம்சமாகவே கொண்டாடுகிறோ... மே நாம், மேல்நாட்டுப் பசுக்களைவிட இந்த நாட்டுக் கறவைக... மிக மிகக் கொஞ்சமாகப் பால் கறக்கின்றனவே. இது எதனால்...

ஆண்டுதோறும் "கார்த்திகை விளக்கீடு" வைத்து வை... துப் பார்த்தும் இருண்ட வீடுகளும் விளக்கையே காணாத வீதி... களும் தானே நம் நாட்டுப் புறங்களில் நிறைந்துள்ளன. இ... எதனால்?

பிறந்தது முதல் இறந்ததுவரை அதற்கு அப்புறமும் கூட... "தெய்வீகச் சடங்குகள்" செய்யத் தவறாத இந்த நாட்டு மக்... ளின் சராசரி வயது 26-ம் மேல்நாட்டு மக்களின் சராசரி வய... அறுபது எழுபது என்றும் இருக்கக் காரண மென்ன?

"சுற்றிப் போடுகிறோம்," "திருஷ்டி கழிக்கிறோம்," "கண்... போடாதே" என்கிறோம். ஆனாலும், நம் மக்கள் எலும்புக் கூடு... களாகத் தானே உள்ளனர்! இது எதனால்?

தமிழர்களே! சிந்தித்துப் பாருங்கள்! சிந்தனையிலிருந்... மூட நம்பிக்கையை விரட்டி அடியுங்கள்.

ந்கை ஓவியம் :

# வேதனைப் புயல்

(ஏ!)

ப்பொழுது வருவார்?''
று ஏங்கியபடி விழிமேல்
வைத்து வாயிற்படியின்
சார்ந்தபடி நின்றுகொண்
தாள் சொக்கி. 'ஏழுமணிக்
லாம் வீடு திரும்பும் வேலன்
இன்றைக்கு மணி பத்தாகி
வரவில்லை' என்று அவள்
ணினாள் ஏதாவது 'தண்
யில், அகப்பட்டுக் கொண்டி
ரோ?' என்று நினைக்கும்
து அவள் இருதயம் 'திக்
கென்று அடித்துக் கொண்
ஆனால் வேலன் 'தான்
டு, வேலையுண்டு' என்றிருப்
எனபது நினைவிற்கு வந்த
ததான் அவள் சற்று நிம்
அடைந்தாள். தெருவில்
வோர் ஒவ்வொருவரையும்
க்காது பார்த்துக்கொண்
இருந்தாள். இவருடைய
ம் வேலன் உருவத்தைப்
ன்றே அவள் கண்களுக்குத்
றும். உடனே சரிந்த
த்தை நிலைநிறுத்தி மூச்
பிடித்துக் கொண்டு கூர்மை
பார்ப்பாள். அவ்வுருவம்
த் தொலைவில் இருக்கும்
அவள் உள்ளத்தில் ஒரு
சாந்தி நிலவும். ஆனால்
த விநாடி அவள் முகம்
ற்றத்தைப் பிரதிபலிக்கும்.
கி இம்முறையில் வேல
வரவு நோக்கிக் காத்திருந்
மணி பதினொன்று இருக்
அப்போது கதவை மூடித்
இட்டுவிட்டு விளக்கைச்
த் தூண்டிவிட்டுத் தன்
கையிலே படுத்தாள்.
தி நிலவிய அந்நேரத்தில்
சந்தடி ஏற்படினும் மிகக்
மயாகக் கவனித்து வந்
ஆனால்......எப்படியோ

அவளை யறியாமலே அவள் தூங்கி விட்டாள் மெய்ம்மறந்து.

"ஏ கழுதை, எழுந்திரு" என்று யாரோ காலால் உதைத்து எழுப்பும்போது தான் அவள் விழித்துக் கொண்டாள். உடனே சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு கண்ணைக் கசக்கினாள். பின்பு அவள் தலை நிமிர்ந்து பார்த்தபோது எதிரே வேலன் கையில் ஒரு கழியுடன் நிற்பதை உணர்ந்தாள். அவன் முகம் அவள் உள்ளத்திலே ஒரு வித பரபரப்பை உண்டாக்கிற்று. கலைந்த மயிர்—சிவந்த கண்கள் துடிக்கும் மீசை—வேலனின் இந்த புதிய தோற்றம் அவளைத் திடுக்குறச் செய்தது. அடுத்த விநாடி வேலனிடம் ஏதோ ஓர் துர்நாற்றம் வீசுவதை சொக்கி உணர்ந்தாள். பம்பரம்போல் அவள் சிந்தனை சுழன்றது. அவளுக்கு உண்மையை உணர அதிக நேரமாகவில்லை. கதவை நோக்கினாள். அது உடைந்து கிடந்தது.

"மச்சான்—இது என்ன?" என்றாள் பயம் கலந்த குரலில். ஆனால் பதில்? சிவந்த கண்களில் மேலும் சிவப்பேறியது.

"கயிதே, எம்மா, நேரமா, நான் கதவை இடிப்பது. ஏண்டி, உனக்கு என்ன இதுக்குள்ளே தூக்கம்...உம்......சொல்லுடி" அவன் தடுமாறினான். விழப் போனான்--ஆனால் ஊன்றுகோல் அவனை நிலை நிறுத்திற்று.

"கதவை இடிச்சியா? எனக்குத் தெரியாதே! நல்லா அசந்து தூங்கிட்டேன் போலிருக்கிறது!" என்று அவள் குளறினாள்.

"ஏண்டி, உன் கள்ளத்தனம் எனக்குத் தெரியாதா 'சிறுக்கி' என்னிடமாடி உன் வித்தை"—அவன் கடிந்தான். கோபம் எல்லையை மீறிற்று. எனவே அவன் கையிலிருந்த கழி அவள் தலைமேல் விழுந்து 'டங்'கென்ற ஓசை எழுப்பிற்று.

"ஐயோ, இதென்ன........."அவள் மயங்கி விழுந்தாள்.

* * *

காலை மணி எட்டு இருக்கும். வழக்கமாக ஐந்து மணிக்கெல்லாம் விழித்துக் கொள்ளும் அவள் அன்றைக்கு மிகத் தாமதமாகத்தான் விழித்தாள். அவள் படுக்கையை விட்டு எழுந்திருக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. தலையை ஏதோ பாரமாக அழுத்திற்று. அவள் கை அவள் இச்சை இன்றியே தலையைத் தடவிற்று. 'ஆ' இது அவள் திடுக்கிட்ட குரல். அவள் தலையில் பெருத்த காயம் பட்டிருப்பதை உணர்ந்தாள். உடனே கையை எடுத்துப் பார்த்தாள்.

இரத்தம்.

"இரத்தம்!"—அவள் வாய் முணுமுணுத்தது. அவள் சிந்தனை சுழன்றது. முந்திய இரவு நிகழ்ச்சிகள் அவள் கண்முன் ஓடி மறைந்தன. பின்பு பக்கத்திலே கிடந்த கட்டிலை நோக்கினாள். ஆனால் அது காலியாய்க் கிடந்தது. ஆம். வேலன் அதி காலையிலேயே எழுந்து சென்று விட்டான்.

சொக்கியின் கண்கள் நீரைக் கக்கின. சிறிது நேரம் பொறுத்து அவள் படுக்கையை விட்டு எழுந்தாள். அவள் முகத்தில் இப்போது ஏதோ ஒரு 'புதிய உறுதி'' காணப்பட்டது. பின்பு காயத்திற்கு ஒரு கட்டுப் போட்டாள். வீட்டை மெழுகி, தண்ணீர் தெளித்தாள். பின்பு குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு புறப்பட்டாள். அப்போது அடுத்த வீட்டு அம்மாக்கண்ணு எதிர்ப்பட்டாள்.

“என்ன சொக்கி, இம்மாத்த நேரம், குளிச்சியா தண்ணிக்குப் போறே? ஆ அதென்ன தலையிலே? காயமா?” என்று வியப்போடு அவள் கேட்டாள்.

“ஒண்ணுமில்லே அக்கா, காலையிலே மழக்கம் போட்டு விழுந்திட்டேன். அதான், சரி, நான் வரட்டுமா” என்றுகூறி அவள் பதிலை எதிர் பார்க்காது சொக்கி நடந்தாள் வேகமாக.

* * *

“மெ மே அ அ அ அ......” என்று கத்தும் ஆடுகளை மேய்த்துத் தூங்கியபடியே சென்று கொண்டிருந்தான் கருப்பன். அப்போது சோற்றுக்கூடையை இடுப்பில் வைத்துக்கொண்டு மிக வேகமாக வந்து கொண்டிருந்தாள் சொக்கி.

ஏ பிள்ளே, இந்தா....கொஞ்சம் பாக்கு இருந்தா இங்கிட்டு குடுத்திட்டுப்போ” என்று கருப்பன் கேட்டான்,

“பாக்கா. என்னண்டையேது’! என்றபடி விறு விறுவென்று சொக்கி நடந்தாள்.

—ஆம் சொக்கி வேலனுக்கு உணவு எடுத்துக் கொண்டுதான் போகிறாள். வழக்கம்போல் அவள் தன் நீண்ட கரங்களை ஆட்டிக்கொண்டு உல்லாசமாக வயற்புறக் காட்சிகளைப் பார்த்தபடியே செல்லவில்லை. சாணன் சிங்காரத்தோடு வழக்காடி, ஒரு இளநீர் குடித்தவிட்டு அகலும் அவள் இன்றைக்கு சிங்காரத்தைப்பற்றிய சிந்தை இன்றி நடந்தாள். நெற்றியிலே புரண்ட முடியைத் தள்ளிவிட்டு அவள் நடந்தாள். வரப்பை வந்தடைந்ததும் கூடையை இறக்கி வைத்துவிட்டு முகத்தில் முத்து முத்தாக அரும்பிய வியர்வையை முந்தானையால் துடைத்துவிட்டு நாலுபுறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். வேலன் வயலுக்கு நீர் பாய்ச்சுவதைக் கண்டதும் அவள் முகத்தில் ஒருவித ‘களை’ படர்ந்தது. பின்பு, மச்சான் என்று அன்பொழுகக் கூப்பிட்டாள். திடீர் என்று எழுந்த இந்த அறிமுகக் குரல் வேலன் செவியைத் தாக்கிற்று. தலை நிமிர்ந்தான் வேலன். வரப்பில் நின்ற சொக்கியின் உருவம் அவன் கண்களுக்குப் புலப்பட்டது. மறுவினாடி அவனை வெட்கம் சூழ்ந்து கொண்டது. அவன் கண்களினின்று நீர் திவலை, திவலையாக வடிந்தது. வேலன் தன் கையையும் காலையும் சுத்தம் செய்து கொண்டு, சொக்கி இருந்த திசை நோக்கி நடந்தான். ஆனால் முழுதூரமும் தலை கவிழ்த்தபடியே நடந்தான். ‘சொக்கி முகத்தில் நான் எப்படி விழிப்பேன்’ என்று அவன் உள் உணர்வு எண்ணமிட்டது. சென்ற இரவு நிகழ்ச்சிகளை நினைக்க நினைக்க துக்கம் அவன் நெஞ்சைப் பிளந்தது.

“நீ கொலைகாரன், இரக்கமற்றவன்......மதுவுண்டு மதி இழந்து அருமை மனைவியைத் துன்புறுத்திய துன்மார்க்கன்”. இவை அவன் இருதய இடிகள். அவன் உள் உணர்வு அவனை சம்மட்டி கொண்டு தாக்கிற்று. வேலனின் கால்கள் பின்னிக் கொள்ளவே அவனால் சுலபத்தில் நடக்க முடியவில்லை. எப்படியோ சொக்கி இருந்த இடத்தை மிகக் கஷ்டப்பட்டு அடைந்தான். தலையைத் தூக்கி அவள் முகத்தைப் பார்த்தான். அவன் வேதனை நெஞ்சை அழுத்திற்று. அவன் கண்கள் நீரைச் சொரிந்தன. “சொக்கி...” அவன் பேசத் தொடங்கினான். ஆனால் முடிக்கவில்லை—முடிக்க முடியவில்லை. அவன் கண்கள் நீர்த் தடாகமாயின.

“இதென்ன சின்ன கொயந்தை மாதிரி அழுவறிங்க. இப்ப
என்ன முழுகிப்போச்சு சும்
இருங்க சாப்பிடுங்க,” அவ
அன்பில் தோய்ந்த சொற்களை
பகர்ந்தாள். வேலனால் நி
முடியவில்லை எனவே கீ
அமர்ந்தாள். அவளும் அம
தாள்!

“சொக்கி, நீ ஏன் இவ்வள
‘ஜலதி’யாக வந்து விட்டா
எனக்காகப் பாக்கப் பாக்க சன
யலை முடிச்சியா? இந்தப் பா
புத்திப் பிசகாகச் செய்த கு
த்தைக் மன்னிப்பாயா? அவ
அடுக்கினான் மேலும்.

“என்ன, பிரமாதமான தப்
சேஞ்சிட்டிங்களாம். நான் ஏ
மன்னிக்கணும். தப்பு, என் தப்
தானே! நான் தூங்காமே இ
ந்து கதவைத் திறந்திருந்தால்...
அவள் முடிக்கவில்லை.

“சொக்கி, தப்பு உன்னுடை
தல்ல உண்மையாகச் சொல்
கின்றேன், பொய் சொல்
வில்லை...பொய் சொன்னால் எ
மன சாட்சியும் பொறுக்காது
நேற்று, பண்ணையிலே ஏக
வேலை இருந்துச்சு. அதனா
குடிச்சாத்தான் நாளைக்
வேலைக்குப்போக, சரிப்படும்
தோணிச்சி அதனாலே நம்ப க
தன் இல்லே, அவனோ
ரெண்டு காசுக்குப் போ
லாம்ணுபோனேன். ஆனா
என்னமோ புத்திகெட்டு அ
கமா குடிச்சுட்டேன் அதனா
தான்....” அவன் பரிதாபக
மான முகத்தோடு மென்
விழுங்கி பேசினான்.

“ஏன் மச்சான, இம்பி
கவலைப் படறீங்க. போ
போவுது. ஆனா இன்னமொ
தடவை மட்டும் குடிக்காதீ
கோ’! என்றாள் சொக்கி கொஞ்
லாக.

“என்ன சொன்னே. இன்
மொருதடவை அந்தப் பக்க

(12-ம் பக்கம் பார்க்க)

# ..ப்பராயன் சர்க்கஸ்

டாக்டர் சுப்பராயன்-ஆமாம், ..ப்பிற்குரிய நம் உள்நாட்டு ..மைச்சர் சுப்பராயன் தான்— ..போது கொஞ்சகாலமாக சர் ..ஸ்வேடிக்கை காட்டத் தொட ..யிருக்கிறார். சர்க்கஸின் ஒரு ..ட்சி சென்னை சட்டசபையில்; ..ன்ரென்று நாகப்பட்டினத் ..ல்; மற்ருென்று சிதம்பரம் ..ளை வாலிபர் சங்கத்தில்; ..ற்ருென்று திருத்துறைப் பூண் ..யில். சர்க்கஸ் பார்க்கப்பார்க்க ..டிக்கையானது ஆனல்; கட்ட..ம் கிடையாது—இலவசம். ..க்கஸ் யாரும் பார்க்கலாம். ..ர்க்காதவர்கள் பத்திரிகை..ரில் படிக்கலாம் அதுபற்றி. ..ன்ன ஐயா இது! பெரும் ..ராயிருக்கிறது! சுப்பராயன் ..க்கஸ் என்கிறீர்! கட்டண..ல்லை என்கிறீர். பார்ப்ப..கோ வெகு இனிமை என் ..ர். ஊரும் பேரும் விவர..ய்த்தான் தருகிறீர், ஆனல் ..ங்கள் கேள்விப் படவே இல் ..யே சர்க்கசைப் பற்றி. நீர் ..ன்ன வெறுங் கயிறு திரிக் ..ரா, அல்லது, நாங்களென்ன ..ந்தப் பூலோகத்தில் இல்லா.. போய்விட்டோமா" என்று ..டக்கத்தோன்றும் உங்களுக்கு. ..ப்பாடு வேண்டாம். சர்க்கஸ் ..ந்தது உண்மை. நீங்களும் ..லும் இன்று இருப்பது எவ்..வு உண்மையோ அவ்வளவு ..ண்மை. உறுதி தருகிறேன் ..ன்; உங்களுக்கு மனச் சஞ்ச.. வேண்டாம்.

..சர்க்கஸ் என்றேனே, அது ..ன்ன சர்க்கஸ் என்று தெரிய ..ண்டாமா உங்களுக்கு, ..ளுங்கள் அதனை. சட்ட..பையில் டாக்டர் சுப்பராயன் ..த்தியது குதிரை சர்க்கஸ். ..கப்பட்டணத்தில் திராவிடஸ் ..ன் சர்க்கஸ். சிதம்பரனுர் கழகத்தில் அஹிம்சா சர்க்கஸ் திருத்துறைப் பூண்டியில் "வேதனை சர்க்கஸ்." சுப்பரா யன் சர்க்கஸ் இத்துடன் முடிய வில்லை. இன்னும் பல காட்சிகள் உண்டு. மாதிரிக்காகச் சில சொன்னேன்.

சென்னை சட்டசபையில் அப்துல் லதீப் பருக்கி என்பவர் குதிரைப் பந்தய ஒழிப்பு மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். அதை டாக்டர் சுப்பராயன் எதிர்த்துத் தோற்கடித்தார். அப்படிச் செய்வது அவருடைய கட்சிக் கொள்கையாய் இருந்து அவர் அவ்வண்ணம் செய்திருந்தால் நமக்குக் கவலையில்லை. காங்கிரஸ் கொள்கையோ குதிரைப் பந்தயங்கள் தொலைய வேண்டும் என்பது! தோழர் பிரகாசம் பந்துலுகாரு முதல் அமைச்சராய் இருந்த காலததில் அத்தகைய மசோதா ஒன்று சட்டசபை காங்கிரஸ் கட்சி முன் வைக்கப்பட்டு, அது கட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டு, கட்சித் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டும் இருக்கிறது. இடையே பிரகாசம் மந்திரி சபை கவிழ்ந்து போய் ஓமந்தூர் மந்திரி சபை ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தது. உடனே குதிரைப் பந்தய ஒழிப்பு மசோதா வரும் வரும் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனல் ஏமாந்தனர். இன்றே கட்சிக்கொள்கைக்கே மாறாக டாக்டர் சுப்பராயன் குதிரைப் பந்தயத்திற்கு அபயந் தந்திருக்கிறார். காரணம் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமோ இந்த விபரீத நடத்தைக்கு! குதிரைப் பந்தயம் சன்மார்க்கத்திற்கு விரோதம் அல்லவாம், ஒழுக்கத்திற்கு மாறு இல்லையாம், தீமைகட்கு விளைவிடம் என்பது பொய்யாம். நல்ல சாதி குதிரைகள் வளர்வது குதிரைப் பந்தயத்தால் தானும்! ஆச்சாரியார் அவர்களே கூட குதிரைப் பந்தய "கப்" கொடுத்திருக்கிறாராம். ஆகவே அதை எதிர்ப்பது தவறும். எப்படி சுப்பராயன் சர்க்கஸ்!

குதிரைப் பந்தய சர்க்கசை விட மிக வேடிக்கையானது, நாகையில் அவர் நடத்திவைத்த "திராவிடஸ்தான் சர்க்கஸ்." நாகூர் நகர காங்கிரஸ் கமிட்டி ஒரு வாழ்த்துரை மடல் வாசித்தளித்தது அமைச்சருக்கு. பெற்றுக்கொண்ட டாக்டர் கூறினர் திராவிடஸ்தான்என்பதுவெறும் காட்டுக் கூச்சல்என்று. அதோடு நிறுத்தியிருந்தால் கூடப் பாதகமில்லை, அமைச்சா பிரச்சினையை ஆராயவில்லை; யாரோ சொல்வார்பேச்சைக் கேட்டுக்கொண்டு சொல்கிறார் என்று மட்டும் முடிவு கட்டியிருக்கலாம். ஆனல் அதைத் தொடர்ந்து அவர் பேசியதைப் பார்க்கும் போது தான் நமக்குப் பரிதாபம் பிறக்கிறது அமைச்சரிடம். வெகு விரைவில் தமிழ் மாகாணம் ஏற்படப் போவதால் திராவிடநாடு தேவையில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். என்ன விபரீதம்! "மாகாணம்" என்பதற்கும் "நாடு" என்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் கூட உணராதவர்—உணர முடியாதவர் இந்த நாட்டிலே முதலமைச்சருக்கு அடுத்த அமைச்சராக இருக்கிறார். தமிழ் மாகாணம் அமைவதால் திராவிடநாடு தேவையில்லாமற் போய்விடுகிறது என்று ஒருவர் சொல்லுவதும், அந்த "ஒருவர்" டாக்டர்சுப்பராயனுயிருப்பதும், அவர் உள்நாட்டமைச்சராய் இருப்பதும் இந்த நாட்டைத் தவிர வேறு எங்குமே நாம் காணமுடியாத காட்சி—சுப்பராயன் சர்க்கஸ் ஒன்றில் மட்டுமே

(9-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

11—10—47 சனிக்கிழமை

# தோல்வி-முதல் கட்டம்!

நீண்ட நாட்களாகத் "தேசீயத் தம்பிகள்" வேண்டி வரங்கிடந்த தேர்தல் நடந்து முடிந்துவிட்டது.

"மங்களகரமான மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுப் போடுங்கள்" என்ற பழைய சுலோகம் மறுபடியும் ஒருமுறை விண்முட்ட எழுந்து, ஓங்கி முழங்கி, தமிழகத்தை அதிரச் செய்து, அடங்கி விட்டது.

"அன்னை பாரததேவி அரியாசனம் ஏறியது எம்மால்! அவள் தம் விலங்குகள் உடைந்து தூள் தூளாயது நம்பெருமான் காந்தி தொண்டால்!" என்னும் ஆனந்தப் பள்ளு புத்தம் புதிய பாணியில் புதுமுறையில் பாடப்பட்டு மறைந்து விட்டது.

"ஆகஸ்டு 15 எங்கள் வீரத்திறகோர் எடுத்துக்காட்டு! யாம் செய்த தியாகத்தின் விளைவு! எம் கண்கள் சிந்திய நீர், எம் உடலில் துளித்த வியர்வை, எம் நெஞ்சில் எழுந்த துடிப்பு, எம்மனோர் தோள்கள் கண்ட வீரம்—இவை அல்லவோ ஆனந்த சுதந்தரம் தந்தது இந் நாட்டிற்கு! என்று காங்கிரஸ் வட்டாரம் மீண்டும் ஒருமுறை பெருமிதத்தோடு பேசி, மாற்றுக் கட்சியினரை ஏசிய கட்டம் வந்தது; சென்றது.

"பாரதமாதாவின் பிரிய நேசர்கள் நாங்களே! அவளுக்கு உற்ற ஊறு துடைத்த உத்தமோத்தமர்களும் யாங்களே!" என்னும் பழம் புராணம் மறுபடியும் வாசிக்கப்பட்டு, மேடைகளில் எடுத்துக் கூறப்பட்டு, வீர உரையாளர்கள் நாவில் நடமாடவிடப் பட்டது இன்று ஓய்ந்துவிட்டது.

"எங்களுக்குத்தரும் ஓட்டு காந்தி மகாத்மாவுக்குத் தரும் ஓட்டு! ஜவகர்லால் வீரர்க்குத்தரும் ஓட்டு! தியாகச் சிந்தனைக்குத் த[...] ஓட்டு! பிரிட்டிஷார்க்[...] தரும் சீட்டு!" — 193[...] கூறப்பட்ட இந்த வாச[...] புது மெருகு தரப்பட்டு ம[...]ளிடம் மறுபடியும் நீட்[...] பட்ட காட்சி முடிவு பெற்[...] விட்டது.

ஆம், ஊரெங்கும் "தே[...]தல் சீசன்" சென்ற[...]கள்!

ஆகஸ்டு 15-ல் சுதந்த[...] திருநாள்! அக்டோபர் 2[...] காந்தி ஜயந்தி, இடை[...] தேர்தல்! காங்கிரஸ் தே[...]ழர்கட்குத் தேர்தலை நடத்[...]விக்க இதைவிடப் பக்[...]மான சூழ்நிலை வே[...] கிடைக்குமோ?

தேசீய வட்டாரத்[...] இவ் வண்ணம் கொண்ட[...]டமும் களியாட்டமும் நில[...]ந்திருந்த வேளையில் தே[...]தல் வந்தது. வந்த தே[...]லில் நேரிடையாகக் கல[...] கொண்ட ஒரே ஒரு அ[...]யல் கட்சி காங்கிரஸ்! தி[...]விடர் கழகம் தேர்தலு[...] உறுப்பினர்களை நிறு[...]வில்லை! கம்யூனிஸ்ட் க[...]யும் நிறுத்தவில்லை. என[...] வெற்றி காங்கிரசுக்[...] அமோகமாக இருந்திரு[...] வேண்டும்; ஆனால், இல்[...]

அண்ணல் காந்தியி[...] அற்புத சக்தியை கம்[...]னிஸ்ட் தோழர்களும்கூ[...] சேர்ந்துகொண்டு எடுத்[...]மொழியும் நாட்களில் தே[...]தல் வந்தது. காங்கிரசி[...] பெருவெற்றி என்று வி[...] பரப் படுத்தப்பட்ட ஆக[...] 15-க்குக் கட்டப்பட்ட மா[...]லைத் தோரணங்கள் கலை[...] கூட இல்லை, அதற்குள்[...] தான் தேர்தல் வந்த[...] அரசாங்கக் கொடியும் க[...]

ரஸ் கொடியும் வேறல்ல
-ஒன்றே என்று சொல்
க் கூடிய அதிகாரச் சூழ்
லையில்தான் தேர்தல் வந்
து பல ஊர்களிலும் மந்
ரிகள் நேரில் கலந்து உற்
ாகப் படுத்திய வண்ணம்
இருந்தனர் காங்கிரஸ்
தாழர்களை! ஆட்சிப்பீடம்,
ஆளுங் கட்சியினருக்கு
ஆங்காங்கே துணை செய்த
ம் உண்மை! இவ்வளவுக்
நம் இடையே வந்த தேர்
ல் காங்கிரசுக்கு முழு
வற்றியைத் தரவில்லை.

மூன்று காங்கிரஸ் எம்.
ல். ஏ. க்களுக்குப் படு
தால்வி! சூணுமானுக்க
ின் துடுக்கடக்கவே ஆண்
வன் என்னை அனுப்பி
ள்ளான் என்று அற்புத
ாதம் புரிந்து வந்த சாமி
கஜானந்தாவிற்கு ஹிமா
ய வீழ்ச்சி! பல வட்டாரங்
ளில் தேர்தலுக்கு நின்ற
ாங்கிரஸ் தலைவர்களுக்கு
பாசிட் பறிமுதல்! சில
இடங்களில் தேர்தலுக்குக்
ாங்கிரஸ் பேரில் நிற்கவே
ஆளில்லை! ஈரோட்டில்
4 க்கு 8 இடங்கள் காங்
ரசுக்கு! விருதுநகரில்—
ாங்கிரஸ் தலைவர் காமரா
ரின் சொந்த ஊரில்
ாங்கிரஸ் பெற்றது 24 ல்
0. திருவண்ணாமலையில் 24
கு 9. கும்பகோணத்தில்
பாட்டியிடப்பட்ட வட்டங்
ள் 17 ல் காங்கிரஸ் பெற்
து 8. செங்கற்பட்டில்
2 க்கு 4!.........

எல்லா ஊர்களிலுமே
இப்படி என்றோ, காங்கிர
க்கு வெற்றியே இல்லை
ன்றோ, "பாரததேவி"
தட்டத்துடன் கூறுவது
பால **இது மானக் கேடான**
**தோல்வி** என்றோ, நாம்

சொல்லவில்லை. காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது—பல ஊர்களில் நல்ல வெற்றி பெற்றிருக்கிறது. அதை நாம் மறைக்கவுமில்லை. மறக்கவுமில்லை. நாம் சொல்ல விரும்புவதெல்லாம் காங்கிரஸ் **தோல்வியும்** பெற்றிருக்கிறது—அதை மறைப்பது தவறு என்பது தான்.

இந்தத் தேர்தல் நமக்குப் புகட்டும் பாடம் காங்கிரசின் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டது என்பதுதான். மக்கள் மன்றத்திற்கு இது வரை அதனிடமிருந்த அசையா நம்பிக்கை இன்று ஆட்டங்கொடுக்கத் தொடங்கிவிட்டது. காங்கிரசிடம் மக்களுக்குள்ள பற்று குறைகிறது, ஆசை தேய்கிறது, ஆர்வம் மங்குகிறது, அன்பு சுருங்குகிறது. பற்றும் பாசமும் முழுவதும் மாயவில்லை; ஆனால் மாயத் தொடங்கியிருக்கிறது. "தேசமே காங்கிரஸ்; காங்கிரசே தேசம்"! என்று மக்கள் முன்னெல்லாம் நம்பினர்; இருதய பூர்வமாக நம்பினர். இன்று அந் நம்பிக்கை சரியத் தொடங்கிவிட்டது. செப்டம்பர் தேர்தல் தமிழர்க்குத் தரும் சேதி இதுவே.

வெற்றி இருக்கிறது பல இடங்களில்; ஆனால் தோல்வி — படு பாதாள வீழ்ச்சியும் கூடவே இருக்கிறது.

இன்று காங்கிரசுக்குள்ள நிலை இது! ஆனால் நேற்று — முழு வெற்றி! நூற்றுக்கு நூறு வெற்றி! தோல்வியே காணாத வெற்றி! காலம் மாறுகிறது—மக்கள் உள்ளம் மாறுகிறது என்பதற்கான அறிகுறி இது!

தோல்விப் படலத்திற்கான காரணம் என்ன?

எதிரிகள் சூழ்ச்சி என்று ஒரே வரியில் விடை சொல்லிவிடலாம் இராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் செயலாளர். "அது அல்ல உண்மைக் காரணம்! நீர் போற்றும் காமராஜர் தலைமையின் திறமைக் குறைவு தான் காரணம்" என்று இடித்துரைக்கலாம் "பாரத தேவி." காமராஜர் தலைமை மட்டுமல்ல, ஆச்சாரியார் கும்பலின் சூழ்ச்சியும்தான் காரணம் என்று "தமிழ் மணி" தம்பூரா வாசிக்கலாம். இந்த மூன்று கருத்துக்களிலும் உண்மை இருக்கிறது என்றே வைத்துக் கொண்டாலும் அது முழு உண்மை அல்ல! முழு உண்மை, காங்கிரசின் செல்வாக்கு தேய்கிறது என்பது. காங்கிரசின் மீதுள்ள காதலால் இந்த உண்மை புலப்படாமல் இருக்கலாம். எப்படி புலப்படும்? காதலுக்குக் கண்ணில்லை என்பது தான் உண்மை மொழியாயிற்றே!

காங்கிரஸ், இன்று பண மூட்டைகளின் தாழ்வாரத்தில் தவழ்கிறது. கள்ள மார்க்கட் கழுகுகள், கொள்ளை லாபக் கோட்டான்கள், பாடுபடுவோர்தம் குருதி குடித்து வளரும் நல்ல பாம்புகள், உழைக்காது அலுக்காது ஊரார் உழைப்பை உறிஞ்சி வாழும் அட்டைகள், திடீர்ப் பாய்ச்சலில் ஏழைகள்

வயிற்றைத் தாக்கும் வல்லூறுகள் அத்தனையும் பிற பல கட்சிகளில் இருந்து மெள்ள மெள்ள காங்கிரஸ் கூடாரத்திற்குச் சென்றுவிட்டன இன்று. எனவேதான் தோல்வி, காங்கிரசைத் தேடி வருகிறது. வரத்தான் செய்யும், வரவே வேண்டும்.

நாடிமுத்துக்கள் போன்ற வயிரக் கடுக்கன்கள் காங்கிரசில் ஏராளம் இன்று! வடபாதிமங்கலங்கள் பல நூறு! டாக்டர் சுப்பராயன் போன்ற ஜமீன்தார்கள் அணி அணியாக உள்ளனர்! சர் சண்முகம் போன்ற குட்டிக் குபேரர்களின் ஆசையும் அங்கேதான்! படேல்களின் ரூபா அணா பைசாக்கள் கம்பீரமாக நடமாடும் இடமும் அது! ஆகையால்தான் சமுதாயம் காங்கிரஸ்மீது கொண்டிருந்த தன் பிடிப்பைத் தளர்த்துகிறது.

மேட்டுக்குடிகளின் ஆசீர்வாதம் ஒருபுறம்; வடநாட்டுச் சுரண்டல் இயந்திரம் மறுபுறம் — இரண்டையும் ஏற்றுக்கொண்டது; எதிர்த்துத் தன் சுண்டுவிரலையும் அசைக்கவில்லை தென்னாட்டுக் காங்கிரஸ். இதன் விளைவாகத்தான் தோல்வி அத்தியாயம் தொடங்குகிறது.

வட நாட்டுத் தர்பாரும் ரூபா அணா பைசாக்களின் சலசலப்பும் காங்கிரசில் நாளுக்கு நாள் வளர்கிறது. அது வளர வளர, காங்கிரசிடம் நாட்டிற்குள்ள காதல் மறையவே செய்யும்.

தென்னாட்டில் காங்கிரசுக்குள்ள பலமான எதிர்ப்புச் சக்தி திராவிடர் கழகம் —அது இன்று தேர்தலில் தன் உறுப்பினர்களை நிறுத்தவில்லை; தேர்தலில் கட்சிப் பற்றற்றவர்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்வதோடு மட்டும் நின்றுவிட்டது. அப்படி இருந்தும் தோல்வி, பல இடங்களில், காங்கிரசுக்கு! இந்தத் தோல்வி புகட்டும் பாடத்தைக் காங்கிரஸ் படித்துத்தான் ஆகவேண்டும். படிப்பதற்கு வருத் மாய்த்தான் இருக்கு ஆனாலும் என் செய்வ படிக்க வேண்டியதுதா பாடத்தை!

படிக்கும்போது, தோ வியின் முதல் கட்டம்தா இது—முடிவான கட்டம என்பதை நினைவில் வை துக்கொண்டு படிக்கட்டு


மா. இளஞ்செழியன் B. A. (Hons.) தீட்டியது!

பாசறையின் புது வெளியீடு!

★

# தமிழன் தொடுத்த போர்!

★

1937—40-ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டையே அதிர்ந்தெழச்செய்த **இந்தி எதிர்ப்புப் போராட்டம்** நிகழ்ந்த வகையை உயிரோட்டமுள்ள நடையில் எடுத்துக் கூறும் உணர்ச்சிச் சித்திரம் இந் நூல்.

★

படைத் தளபதிகளைப்பற்றிய பேனாச் சித்திரங்கள்! ஏராளமான நிகழ்ச்சிக் குறிப்புகள்—தலைவர்களின் வீர உரைகள் இவ்வளவும் உண்டு.

**220 பக்கங்கள்!** **விலை ரூ. 1-12-0**

---

# ஈரோட்டுப் பாதை

★

ஆசிரியர்: மா. இளஞ்செழியன் (B. A. Hons.)

**[தமிழ் நாட்டிலே வீசிய பெரும் புயல் சுயமரியாதை இயக்கம்; புயல் வீசிய விதத்தைக் கூறுவது இந் நூல்.]**

விலை அணா 8 அழகிய பதிப்பு

தனிப் பிரதி வேண்டுவோர் 9 அணா தபால் தலை அனுப்பவு

**வியாபாரிகளுக்கு 20 பெர்ஸெண்ட் கழிவுண்டு.**

**பகுத்தறிவுப் பாசறை**
147, பவழக்காரத் தெரு,
**சென்னை-1.**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ணக்கூடிய காட்சி! தமிழ்மாகா
ம் தனி மாகாணமாய் அமைய
ண்டும்; அதுவேபோல
தமக்குரிய **நியாயமான** எல்லை
ளொடு ஆந்திர கேரள கன்னட
காணங்கள் அமையவேண்டும்;
மையும் இந்த நான்கு மாகா
ங்களும் ஒன்றுசேர்ந்து ஒரு
ட்டாட்சி காணவேண்டும்; அங்
கூட்டாட்சி வடநாட்டுச்
றையிலிருந்து விடுபட்டுச் சுதந்
ப் பெருவாழ்வு வாழவேண்
என்பது திராவிடஸ்தான்
ரிக்கையின் முழு உருவம்.
தன் ஒரு சிறு பகுதி—முதற்
தி—ஆரம்பக் கட்டம் தமிழ்
காணப் பிரிவினை அவ்வளவு
ன். இன்றுள்ள நிலையில்
ழ் மாகாணம் தனியே பிரிந்து
வதால் மட்டும் அது படேலி
தின் இரும்புப் பிடியினின்று
லகிவிட முடியாது.
ந்த பிறகும் இன்று
லவேதான் டில்லி தர்பா
கு அது அடங்கிக் கிடக்க
ண்டும். ஆகையால்தான் பிரி
தமிழ் மாகாணம் இயன்றால்
திர மலையாள கன்னட மாகா
த்தவருடன் கூட்டாகவும்,
லையேல் **தனியாக நின்றேனும்**
அரசு காணவேண்டும், வட
ட்டுச் சவுக்கடிக்கு வளைந்து
டுக்கவேண்டிய நிலையற்ற
ஷலிசக் குடியரசு காண
ண்டும் என்று நாம் முழங்கு
றும். தமிழ் **மாகாணம்** என்
வேறு; தமிழ் **நாடு** அல்லது
விட **நாடு** என்பது வேறு.
காணம் என்பது இந்தியக்
ட்டாட்சியிலேயே ஓர் உறுப்
இருப்பது. நாடு என்பது
தை விட்டு விலகி, பாகிஸ்தான்
ல, பர்மாபோல, சிலோன்
ல, டென்மார்க், ஸ்வீடன்,
வே, அமெரிக்காபோல சுதந்
ஆதிபத்தியக் குடியரசாக
ங்குவது. இரண்டையும்
ட்டுக் குழப்பிக்கொள்வது
யாமை. இந்த இரண்டு

பிரச்சினைகளுக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டி தனி நாடு கோரிக்கையை வற்புறுத்தும் திராவிட இயக்கத்தின்மீது கல்லெறிவது பேதைமை. அது இருக்கிறது, ஆகவே இது எதற்கு என்று கேட்பது மதியீனம். இந்த மனப்போக்கு கூடாது. இந்த சர்க்கசும் நமக்குத் தேவையில்லை.

சென்னை கோமளீஸ்வரன் பேட்டையில், வ. உ. சி. கழகச் சார்பில், போலீஸ் தோழர்கள் காந்தி ஜெயந்தி கொண்டாடினர். காந்தியார் படத்தை அங்குத் திறந்துவைத்த அமைச்சர் சுப்பராயன் தன் சர்க்கசின் அடுத்த காட்சியை அங்குக் காண்பித்திருக்கிறார். போலீஸ்காரர்கள் காந்தியாரின் அகிம்சாதத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமாம். சொல்லியிருக்கிறார் சுப்பராயன். என்ன உட்பொருளோ அவர் வாசகத்திற்கு, யார் கண்டார்கள்? குண்டர்கள் பொதுக் கூட்டத்தில் கலகம் செய்கிறார்கள், கல் எறிகிறார்கள், விளக்கை உடைக்கிறார்கள், தடிகொண்டு மக்களைத் தாக்குகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது போலீஸ்காரர்கள் குண்டர்களிடம் சென்று, தம்பிகளே! இது முறையல்ல என்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது குண்டர் தம் கொடுஞ்செயலால் பொது மக்கள் படும் வேதனையைப் போக்க வேண்டியது போலீஸ்காரர்கள் கடமையா, இல்லையா? அப்போது அஹிம்சையைக் கையாள்வதா, கடமையைச் செய்வதா அவர்கள்? கடமையைச் செய்யும்போது போலீஸ்காரர்கள் அஹிம்சாவாதம் செய்யத் தொடங்கிவிட்டால் அவர்களால் கடமையை ஒழுங்கு பெற நிறைவேற்ற முடியுமா? ஏன் இந்த சர்க்கசை நடத்துகிறார் சுப்பராயன்? கொஞ்சமேனும் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா தாம் சொல்வது என்ன, அதன் விளைவு என்ன என்பது பற்றி?

இந்த சர்க்கஸ் காட்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல வருகிறது திருத்துறைப்பூண்டி அத்தியாயம். "ராஜாஜியின் தலைமையை இழந்ததைப் பற்றி நினைக்க நினைக்க என் மனம் எவ்வளவுதான் வெதும்புகிறதென்பதை என்னால் விவரிக்க முடியவில்லை. இந் நெருக்கடியான தருணத்தில் அவருடைய பெருமை மிக்க தலைமை இல்லாதது வருந்தத் தக்கது" என்று திருத்துறைப் பூண்டி அரசியல் மாநாட்டில் கனம் சுப்பராயன் குறிப்பிட்டிருக்கிறார். எந்த ஒரு தலைவரைத் தமிழ் நாடு ஒரே குரலில் வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்கிற்றோ, எந்த ஆச்சாரியாருக்குச் சுழலும் சூறுவளியென எதிர்ப்பு எழுந்ததோ, எவருடைய போக்கு பிடிக்கவில்லையென்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் உலகம் குமுறிக் கொந்தளித்ததோ, எவருடைய வழிகாட்டுதல் தவறு; துரோகம்; விபரீத விளைவுகளுக்கு வித்திடுவது என்று அர்ச்சிக்கப்பட்டதோ அதே தலைவரை, அதே ஆச்சாரியாரை, அதே 'பெருந்தகை' யை டாக்டர் சுப்பராயன் இன்று வழிகாட்டும் வான் பொருள் என்று "சகஸ்ரநாம அர்ச்சனை" புரிவதில் என்ன மாயம் மறைந்து கிடக்கிறதோ நமக்குத்தெரியவில்லை.

இந்த வாரத்து சுப்பராயன் சர்க்கஸ் மிக மிக வேடிக்கையாய்த்தான் இருக்கிறது. அதோ சட்ட சபையும் தொடங்கிவிட்டது, புது மசோதாக்களைப் பற்றி ஆலோசனை செய்ய. சுப்பராயன் சர்க்கஸின் புதுக் காட்சிகள் அங்குக் காட்டப் படலாம், போய்த்தான் பார்ப்போம். வாருங்கள்.

—

# புனை பெயர்கள் ஏன்?

[செங்கோடன்]

**[சென்ற திங்கள், நண்பர் இராஜரத்தினம், எழுத்தாளர்கள் புனை பெயர் என்னும் முகமூடி அணிவதன் மர்மம் என்ன என்னும் கேள்வியை எழுப்பி, "மர்மம் என்ன? எல்லாம் பித்தலாட்டம்தான்" என்று சொல்லி முடித்துவிட்டார். அது தவறு என்று காரசாரமாகக் கூறுகிறார் 'செங்கோடன்' என்னும் புனை பெயருக்குள் மறைந்திருக்கும் தோழர், இம் முறை.]**

அவன் ஒரு சிறந்த எழுத்தாளன், நாட்டில் நடக்கும் நானாவித நிகழ்ச்சிகளை, ஏட்டிலே தீட்டிக் காட்டும் ஆற்றல் அவனுக்குண்டு. அவனது உணர்ச்சி யூட்டும் கட்டுரைகள், நாட்டு மக்கள் படித்துப் பயன்பெற வேண்டியவை. அவனது அண்ணன் ஒரு பத்திரிகாசிரியன். ஆனலும், அவனுடைய கட்டுரைகள் வெளியிடப்படவில்லை. காரணம் "அண்ணனுக்கு" தானிருக்கத் தம்பியின் பெயரை உலகுக்குக் காட்டுமளவுக்கு உன்னதமனப்பான்மையில்லை. தம்பிக்கோ, எழுதாமலிருக்கவும் முடியவில்லை. எழுதினல் வெளியிடுவோருமில்லை. சிக்கலான நிலை. சிந்திக்கத் தொடங்கினன். ஒரு முடிவுக்கு வந்தான். முகமூடி யிட்டுக்கொண்டான். எவரும் அறிந்திராத புதிய பெயர். கட்டுரைகள் தபாலில் அனுப்பப்பட்டன.

"சிறந்த அறிவாளி. நல்ல எழுத்தாளன்"

"உணர்ச்சி யூட்டும் எழுத்து. அழகான சொல்லடுக்கு. சரமான நடை."

"அது வல்ல! ஒவ்வொன்றும் ஒரு பேனச்சித்திரம்! உயிருள்ள ஓவியம்!!"

"அது சரி...இவ்வளவு அற்புதமாக எழுதும் அந்த ஆள் யார்?"

"அது தானே தெரியவில்லை. பெரிய புதிராக வல்லவா இருக்கிறது"

"யாராயிருந்தாலென்ன! அருமையான எழுத்து. அவசியம் வெளியிடவேண்டும்"

இது, அண்ணனது பத்திரிகாலயத்தில், உதவியாசிரியர்களின் உரையாடல்.

நாட்டிலே பரவிய அவனுடைய கருத்துரைகள் பலராலும் பாராட்டப்பட்டன. புகழ் மலை மலையாக வந்து குவிந்தது—அவனுக்கல்ல—அவன் சூட்டிக்கொண்ட புனை பெயருக்கு. இருந்தாலென்ன! அவன் விரும்பியது கீர்த்தியல்ல—கடமை; அது நிறைவேறிவிட்டது.

—இங்கே குறிப்பிடப்பட்டவர் பெஞ்சமின் ப்ராங்கலின்.

மற்றும் ஒருவர். இவரும் ஒரு சிறந்த எழுத்தாளர். உரையாடல், என்பது வெறும்பொழுது போக்குக்காக ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் வெறும் சொற்றொடர்கள் என்றில்லாமல், அதனைத் தனியொரு கலையாக ஆக்கிய கலைஞன்! முதன் முதலாக ஆங்கில அகராதி தொகுத்த அறிஞன்! ஆமாம்—மிகப் பெரியமனிதர். அவருடைய அறிவுத் திறனும் திடீரென்று வளர்ந்து விடவில்லை. தொடக்க காலத்திலும், அவருடைய எழுத்தில் அழகும் பொருளும் அறவே இல்லாமல் இருந்திருக்கமுடியாது. ஆனல் அவர், தன்னுடைய முதல் கட்டுரையை வெளியிட பட்டபாடு சொல்லி முடியாது! தனக்காக, தானே பிறரைக் கெஞ்சுவது தன் சுயமரியாதைக்கு இழுக்கென நினைத்தார். ஆகையால். கட்டுரையோடு கீழ்க்கண்டமாதிரியான ஒரு கடிதத்தையும் வைத்தனுப்பினர் பத்திரிகாசிரியர்க்கு.

"அன்புள்ள ஐயா, இத்துடன் அனுப்பியுள்ள கட்டுரை என் நண்பர் எழுதியது. அது எவ்வளவு அருமையாயிருக்கிற தென்பதைத் தாங்களே தெரிந்து கொள்வீரென நினைக்கிறேன். ஆகையால், தயவு செய்து இதனை அவசியம் வெளியிடவேண்டும் என மிகத் தாழ்மை
யாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**தங்கள் நன்றியை என்றும் மறவா**
**ஜான்சன்.**

முன்னவர் முக மூடியிட்டா
பின்னவர் பொய்சொன்னர்,
மேற் சொன்னவை மேல்நா
டிலே நிகழ்ந்தவை—பற்பல ஆண்
களுக்கு முன்பு. தமிழ்நாட்டிற்கு
வருவோம். இவர் ஒரு கவிஞர்.
அது மட்டுமல்ல, இவர்தான் இன்
றைய தமிழ்நாட்டின் தலை சிறந்த
கவிஞர், புரட்சிக் கவிஞர், செந்த
மிழ்ச் செல்வர்—இன்னும் எவ்
ளவு வேண்டுமானலும் அடுக்கிக்
கொண்டே போகலாம், ஆனலும்
முழுமையும் சொன்னதாகாது அவ்
வளவு சிறப்புடையவர். ஆமாம்
பாரதிதாஸன் அவர்கள்தான். அவ
ரது கவிதைகளின் வெளியீட்
ரிமை கொடுத்தால் போதும் என்
ஏங்கிக் கிடக்கின்றனர் இன்றை
பதிப்பக உரிமையாளர்கள்: ஆனல்
அன்று? அவர் எழுதிய பாய்
பாட்டு அவருடைய பெயரிலே
வெளியிடப்படவில்லை. அவருடை
புனை பெயரில்கூட வெளிவ
வில்லை. ஆனல்; பாரதியார் பெய
ரிலேயே வெளிவந்தது.

இவைகளுக் கெல்லாய கா
ணம்? இன்றைய நாள் வரையிலே
மேல் நாட்டிலோ, கீழ் நாட்டிலோ
அல்லது உலகத்தின் மற்றைய எந்
தப் பாகத்திலோ, உண்மை அறிவுக்
கும் ஆற்றலுக்கும் மக்கள் மன்றத்
திலே மதிப்பு இருந்ததாகத் தெரிய
வில்லை. ஆகையால், பல அரிய
கருத்துக்களை மக்களுக்குக் கூற
வேண்டும் என்ற எண்ணமும்
எண்ணியதை ஏற்ற முறையிலே
எடுத்துக் கூறும் ஆற்றலும் படைத்
திருந்த அறிஞர் பலரும், நாட்டிலே
பரப்ப வசதி யற்றிருந்த நிலையிலே
தேடிக்கொண்ட சாதனங்கள்—
குறுக்குவழிகள்தான் பொய்யும்
மறைவும், புனைபெயரும். அவர்கள்
சென்றது குறுக்கு வழியாக இருக்
கலாம் ஆனல் தவறென்று சொல்ல
முடியாது. நல்லதைச் செய்வதற்
காக எதையும் செய்யலாம். நோக்
கம் உயர்ந்ததாயிருக்கவேண்டும்
அதை அடைவதற்கு எந்த வழியில்
சென்றல் என்ன?

கொலைத் தண்டனைக் குட்பட்
கொடுஞ்சிறையிலே அடை பட்
உள்ளங் குமுறிக்கிடந்தான் நண்
பன். வேதனைத்தீயிலே விடுதலை
தர எண்ணினன் **சிட்னி கார்டன்**.

கார்டன் உள்ளத்திலே தோன்றி
து கருணை. அதற்காக அவன்
சய்யவிருந்தது தியாகம். தன்
ண்பனுக்காக தன் உயிரையே
ணயம் வைத்தான்—பலி பீடத்
ல், அவன் எண்ணம் போற்றற்
ரியது, ஆனால் செய்யும் வழி?
என் நண்பனுக்குப் பதில் என்னை
கதியாக வையுங்கள்" என்று
வளிப்படையாக சொல்லியிருந்
ால், சிறையதிகாரிகள் ஒப்பியிருப்
ார்களா? நினைத்ததையெல்லாம்
நர்வழியிலேயே செய்யமுடியுமா
ஆகையால், அவன் இறுதியில்
சய்தது என்ன? சிறையதிகாரி
ளை ஏமாற்றினான். சிறைக்குள்
சன்றான். நண்பனிடம் செய்தி
யக் கூறினான், உடைமாற்றிக்
காண்டான். கைதியானான் நண்
னுக்குப் பதில், நண்பனுடைய
டை உடை பாவனையில், நண்
னைப் போலவே நடித்து நண்ப
க்குத் தூக்கு மேடை சென்று
ான் இறந்தான். நண்பன்
ப்பினான். இருவருக்கும் மகிழ்
சி. "மரண வாயிலிருந்து தப்பி
னும்" என்றதால் நண்பனுக்கு
கிழ்ச்சி. "நண்பன் மகிழ்ந்தான்'
து போதும்" என்று இவனுக்கு
கிழ்ச்சி.

இவன் செய்ததிலே குற்றம்
ன்ன?

—இது **சார்லஸ் டிக்கன்ஸ்** எழு
ப "**இரு நகரங்களின் கதை**"யில்.

இவ்வாறு பற்பல நிகழ்ச்சிகள்
ரித்திரத்திலே நடைபெற்றிருக்
ன்றன.

ஷேக்ஸ்பியர் தீட்டிய, "**வெனிஸ்**
**ர வியாபாரி**" என்ற நாடகத்தில்
ன்னுடைய கணவனது நண்ப
ரக் காப்பாற்ற எண்ணிய **போர்**
**யா**, சாதாரண பெண் வேடத்தில்
சன்றிருந்தால், நீதி மன்றத்திலே
ன்று வாதிக்கும் வாய்ப்பு கிடைத்
ருக்குமா? ஆண்ரூபத்தில், வக்
ல் வேடத்தில் செல்வது தவ
றன்றோ ஏமாற்றல் என்றோ எண்
ரியிருந்தால், அண்டோனியோ
யிர் காப்பாற்றப்பட்டு இருக்க
டியுமா? வீறு கொண்ட மகளை
பார்க்கோலம் பூணாது, மலைச்சா
ல்களிலே திரிந்துலாவும் இடைப்
பண்ணாகச் சென்றிருந்தால்,
**ான் ஆப் ஆர்க்**, போர்க்களப் பக்
அடிவைத்திருக்க முடியுமா?
ரெஞ்சு நாட்டுமக்களுக்கு செய்ய
எண்ணிய சேவையைத்தான் அவள் செய்திருக்கமுடியுமா?

ஆகையால், ஏமாற்றலாம் பொய் சொல்லலாம், மாறுவேடங்கொள்ளலாம், ஒளியலாம், மறையலாம், சதி செய்யலாம்—ஆனால் செய்ய வேண்டும் என்று நினைக்கும் செயல் பயன்தரக்கூடியதாயிருக்க வேண்டும், அவ்வளவுதான். அந்த முறையிலே, நாட்டுக்கு நல்லதைச் சொல்ல எண்ணும் எழுத்தாளன், தான் சூட்டிக் கொள்ளும் புனைபெயரை ஒரு முக மூடியாக உபயோகிக்க எண்ணினாலுங்கூட, அதைக் கோழைத்தனம். தைரியமின்மை என்று சொல்லி, கண்டித்து விட முடியாது.

புரட்சிகரமான கருத்துக்களை எழுத எண்ணுவோர், சொந்தப் பெயரிலே எழுத அஞ்சலாம். ஆனால் இந்த உப்பு சப்பற்ற காதற் கதைகளை எழுதுவோர் புனைபெயர் போட்டுக் கொள்வதின் அர்த்தம் புரியவில்லை என்கிறார் தோழர் ராஜ ரத்தினம். இது நான் கேட்க வேண்டிய கேள்வி. காதற்கதைகள் புனைபெயர்களிலே வெளியிடப்படுவது பயத்தின் காரணமாக வல்ல. புனைபெயர்கள் வைத்துக் கொண்டு எழுதுவது இக்கால முறை, என்பதாலு மல்ல. அவைகளிலே தனியொரு கவர்ச்சி இருக்கிறது என்பதால்தான். சில புனைபெயர்களிலே. தோழர் ராஜ ரத்தினம் ரசிக்கும் அளவுக்கு அழகு இல்லாமலிருக்கலாம். ஆனால் சாதாரணப் பெயர்களோடு எழுதுவதை விட, ஒரு புது மாதிரியான பெயரோடு—அந்தப் பெயருக்கு அர்த்தமில்லாமல்கூட இருக்கட்டும்—எழுதினால் படிப்போர் கவனத்தை சற்று அதிகமாக இழுக்கத்தான் செய்யும். பலருடைய கவனம் கவரப்பெற்று, அவர்கள் யாவரும் படித்துப் பயன் பெறவேண்டும் என்பதுதான், பெரும்பாலான எழுத்தாளருடைய ஆவலும் ஆசையும். வேண்டுமானால், மேற்குறித்த தோழருக்கு தன் சொந்தப்பெயரே பலரிடை அடிபடவேண்டுமென்று எண்ணமிருக்கலாம். அதை பிறரிடமும் எதிர்பார்ப்பது தவறு.

உண்மையில் பார்க்கப்போனால், புனைபெயர்களிலே அறவே அழகு இல்லையென்று சொல்லிவிட முடியாது. உதாரணமாக, 'திராவிட நாடு' பத்திரிகையில் 'பரதன்' என்ற புனைபெயரோடு [illegible] கட்டுரைகள் வெளிவருகின்றன. [illegible] களிலே, பரதனுக்கும் வீரனுக்கும் நடைபெறும் உரையாடல்கள் தீட்டப்படும். வீரன் ஒரு தீவிர[illegible] சீர்திருத்தவாதி. அவன் பரதனிடம் ஓடோடி வருவான் "கேட்டாயா, பரதா" என்று பதை பதைக்கும் உள்ளத்தோடு பேசத் தொடங்குவான். "பதருதே" என்பான் பரதன். வீரன் கேட்கமாட்டான்: புரட்சிகரமான கருத்துக்களை எரிமலையென கக்கத் தொடங்கிவிடுவான். மறுப்புகள் வீசப்படும் பரதனால். பலத்த வாதம் இருவருக்குமிடையே, இறுதியில் பரதன் வீரன்பக்கம் சாய்வான்.

பரதன் யார்? வீரன் யார்? இருவரும் அண்ணாத்துரைதானே. அவர் ஏன் தனது புரட்சிக் கருத்துக்களை நேராகச் சொல்லக்கூடாது? ஏன் இந்த ஏமாற்றல் என்று கேட்கமுடியுமா? நாட்டிலே, சீர்திருத்தவாதியின் வார்த்தைக்கு முதலில் எவ்வளவு மறுப்பு எழுகிறது, பிறகு எப்படி அத்தனை மறுப்புகளும் மடிந்து, சாய்ந்து வீழ்கின்றன என்பதின் நல்லதோர் படப்பிடிப்பல்லவா வீரன் பரதன் உரையாடல்?

இது போன்றே, 'தமிழ் மணி' என்ற பத்திரிகையில், 'உண்மை உலவுகிறது' என்ற தலைப்பில், 'துப்பறிவோன்' என்ற புனைபெயரோடு எழுதப்படுவதிலே அர்த்தமில்லையா? அல்லது அந்தக் கட்டுரைகளினால் நாட்டிலே யாதொரு பலனும் ஏற்படவில்லையா?

மேலும், 'அழகு' என்ற பத்திரிகையிலே, கொய்த மலர்கள், என்ற தலைப்பில், 'கத்தரிக்கோல்' என்ற புனைபெயரோடு எழுதுவதிலே ஒரு புது அழகு காணப்படவில்லையா? ஆகையால், அழகுள்ள புனைபெயர்களையாவது அனுமதிப்பாரா தோழர் ராஜ ரத்தினம்.

மேடையிலே வீரா வேசத்தோடு பேசும் தோழர்கள்கூட, எழுதும் போது ஏனோ புனைபெயர்களோடு எழுதுகிறார்கள் என கேட்கிறார். இதுவும் நான் கேட்க வேண்டிய கேள்வி. அவர் கேட்பதில் அர்த்தமேயில்லை. புனைபெயர்களோடு கட்டுரை தீட்டுவோர்மீது, அரசாங்கமோ அல்லது தனிப்பட்ட ஆனோ

நடவடிக்கையெடுக்கவோ, வஞ்சம் தீர்த்துக்கொள்ளவோ எண்ணினால், கட்டுரையை வெளியிட்ட பத்திரிகாசிரியரைக் கேட்டால், எழுதினவரது உண்மைப்பெயரும் முகவரியும் கிடைத்துவிடும் என்பது தோழருக்கு நினைவிருந்தால், புனைபெயர் சூட்டிக்கொள்வது கோழைத்தனம் என்று சொல்லியிருக்க நியாயமில்லை.

தோழர் ராஜரத்தினம் அவர்களது கருத்துக்களில் ஒன்று மட்டும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படவேண்டியது. சில எழுத்தாளர்கள் பல புனைபெயர்கள் வைத்துக்கொண்டு, புத்தக ஆசிரியர் ஒருவர்போலவும், மதிப்புரை எழுதுவது வேறொருவர்போலவும் ஏமாற்றல் வித்தை செய்து, எழுத்துத் துறையிலே பித்தலாட்டம் செய்வதைத்தான் குறிப்பிடுகிறேன். இத்தகைய பித்தலாட்டம் மிகவும் தீவிரமாக கண்டிக்கப்பட வேண்டியது.

பற்பல பெயர்களோடு பற்பல "தில்லு முல்லு" கள் செய்து வருவதிலே தோழர் வல்லிக் கண்ணன் கைதேர்ந்தவராக இப்போது காட்சியளிக்கிறார். ஏதோ சிறிது எழுதத் தெரிந்துவிடுவதாலேயே எதையும் செய்து விடலாமென நினைக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்வரை, வெறும் வல்லிக் கண்ணனாக இருந்துவந்தார். இப்போதோ, அவர் 'கோரநாதன்,' 'மிவாஸ்கி' 'நையாண்டி பாரதி,' 'அசோகன்,' 'சொக்கலிங்கம்' ஆகிய பற்பல ரூபங்களிலே தோற்றமளிக்கிறார். "இது என்ன அதிசயம்! ஒருவருக்கா இத்தனைபெயர்கள். ஏன் இவ்வளவு?" என்கிறீர்களா?

"ஒரு பெண் ஒருவனுக்குத்தான் மனைவியாமே இந்தியாவில்! என்ன சுய நலம்!" என்றானும் ஒரு திபேத்தியன். அதைப்போலவே இவரும், "என்னுடைய எழுத்து, ஒரு கட்சிக்கு மட்டுமா. இல்லை. எந்த கட்சிக்கு வேண்டுமானாலும் பயன்படுத்துவேன்" என்று சொல்வார் போல் தெரிகிறது. "என்ன? அவ்வளவு பரந்த மனப்பான்மையா" என்றல்லவா கேட்கிறீர்கள். அதெல்லாம் ஒன்றும் இல்லை. பரந்த மனப்பான்மையாவது, மண்ணாங்கட்டியாவது. ஏதோ தன்னிடம் சிக்கிக்கொண்ட சிறிது எழுத்துத் திறமையை முதலாக வைத்து நடத்தும் வியாபாரமில்லாது வேறென்ன அது? ஏன்? நான் சொல்வது புரியவில்லையா?

காங்கிரசை ஆதரிக்கும் போது 'வல்லிக்கண்ணன்.' திராவிட கழகக் கொள்கைக்கு இறங்கும் போது 'கோரநாதன்,' கம்யூனிஸ்ட் தோழர்களையும் 'காகா' பிடித்து வைக்கலாமென்று எண்ணும் போது 'மிவாஸ்கி'. பொதுவாக சில நிகழ்ச்சிகளையோ, கொள்கைகளையோ 'கிண்டல்' செய்ய நினைக்கும்போதும், சினிமாத்துறையைப்பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியுமென்பதைக்காட்ட ஆசைப்படும்போதும், 'நையாண்டி பாரதி', 'அசோகன்' ஆகிய பெயர்கள். 'தந்தை தன் மகனிடமே புணர்ந்தான்' என்பன போன்ற மட்டரக கதைகளையும் இன்னும் ஆபாசமான வர்ணனைகளையும், காமக் களஞ்சியங்களையும் எழுதும் போது 'சொக்கலிங்கம்' என்றரீதியிலே, அவருடைய அந்தப் பெயர்கள் பற்பல நகரங்களிலே மிளிர்கின்றன. "என்ன? உண்மையாகவா?" என்கிறீர்களா; அதை ஏன் கேட்கிறீர்கள், விட்டுத் தொலையுங்கள்.

ஆகையால், புனை பெயர்கள் ஆளை மறைக்கும் மர்மப் பெயர்கள் என்ற காரணத்தால், அவைகளின் உதவியைக் கொண்டு பல கட்சிகளுக்காகவும் பரிந்து பேசி, தீப்பொறி பறக்கவும் எழுதலாம் சிலர். ஆனால் எழுத்துத் துறையிலே, அவர்கள் நடத்த நினைக்கும் வியாபாரம் அதிக நாட்களுக்குச் செல்லுபடியாகாது.

ஆனால், ஒரே கொள்கைக்காக, ஒரே இலட்சியத்துக்காக உழைக்க எண்ணும் எழுத்தாளன், அழகுக்காக, கவர்ச்சிக்காக, வசதிக்காக, பலர் கவனத்தை யிழுப்பதற்கா[க] நாட்டிலே நல்லதொரு பலனையுண்டாக்குவதற்காக எத்தனைப்புனை பெயர்களில் வேண்டுமானாலும் தங்கள் கருத்தோவியங்களைத் தீட்டிக் குவிக்கலாம்; தவறில்லை.

---

## வேதனைப் புயல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டிபாக்க மாட்டேன் ஆமா[ம்] தெரிஞ்சுதா"—அவன் கூறினான் விறைப்போடு.

'ஆனால் உன் மண்டையை உடைச் சுட்டேனே அதுதான் என் மனசை ரொம்ப உறுத்துது" அவன் மறுபடியு[ம்] கலங்கினான். "அது என் த[லை]விதி அதுக்கு நீங்க என்ன செ[ய்]வீங்க. சரி இராத்திரி கூட சா[ப்]பிடலையே 'வவுறு' பசிக்கலை' என்றபடி கலயத்தை எடுத்து கூழைக் கரைத்து வார்த்தான். அதை அவன் தன் இருகையிலும் ஏந்தி அவள் மேல் வைத்த விழி வாங்காதபடி பச்சை மி[ள]காயைக் கடித்துக்கொண்டு ப[ருகு]கிறான். அவன் அவள் அ[ன்]பைப் பருகினானா? அல்ல[து] கூழைத் தான் பருகினானா? அது அவனுக்கே விளங்கவில்லை. ஆனால் **வேதனைப் புயல்** ஓய்[ந்]ததை மாத்திரம் அவனால் உண[ர] முடிந்தது.

---


## போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

| | உள் நாடு | | | வெளிநா[டு] | |
|---|---|---|---|---|---|
| தனி இதழ் ரூ. | 0 | 1 | 6 | 0 | 2 |
| ஆண்டு 1-க்கு | 5 | 0 | 0 | 6 | 8 |

விவரங்களுக்கு:

போர் வாள்,

147, பவழக்காரத் தெரு, சென்னை


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)